கிரேடில் போடப்படுகிறது. அதற்குப் பதிலாக ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை நியமிக்கும் உத்தேசம் சர்க்காருக்கு உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, புதிதாக சர்க்கரை ஆலைகளைத் துவங்கும் விவரம் இல்லை. இப்போது கூட்டுறவு ஆலைகளுக்கு மானேஜிங் டைரக்டராக டி.ஆர்.ஓ. கிரேடில் போடுவதோடு ஐ.ஏ.எஸ்; கிரேடிலும் போடப் பட்டு வருகிறது.

திருமதி வி. ப. பழனியம்மாள் : தாராபுரம் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கு டைரெக்டர்கள் நியமிப்பது போல அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைக்கும் டைரெக்டர்கள் நியமிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : அது பரிசீலனையில் இருந்து வருகிறது.

திரு. வி. கே. கோதண்டராமன் : லாபகரமாக நடக்கக்கூடிய சர்க்கரை ஆலைகள்—தாங்கள் கொள்முதல் செய்யக்கூடிய கரும்பு சாகுபடியாளர்களுக்கு ஓரளவு அதிகபாக விலை கொடுக்கும் உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, முன்பு இருந்ததைவிட இப்போது விலையை ஓரளவு கூட்டி 90 ரூபாய் அளவில் கொடுக்கக் கூடிய நிலைமை அண்மையில்தான் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : அமராவதி கூட்டுறவு சர்க்கரை ஆலைகளுக்கு விவசாயிகள் கரும்புகளை எடுத்துப் போகிறபோது உடனடியாக அவற்றை அவர்களால் டெலிவரி எடுக்க முடியாமல் லாரிகளை அப்படியே நிறுத்தி வைத்து விவசாயிகளுக்கு லாரி வாடகை நட்டத்தையும் உண்டாக்கி விட்டு—அவர்கள் ரோட்டிலேயே போட்டுவிட்டு வந்த பிறகு—இன்றைக்கு அந்த ஆலைக்கு கரும்பு கொடுக்காமையால் ஏற்பட்டிருக்கிற நட்டத்தை—அந்த விவசாயிகளிடம் இருந்தே வசூல் செய்ய உத்தேசித்திருப்பதைத் தடுக்க அரசாங்கம் முன் வருமா?

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : ஆங்காங்கு உற் பத்தியாகக்கூடிய கரும்புகளை ஆங்காங்கே சென்று கொள்முதல் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தி இப்போது பரிசீலனை செய்யப் பட்டு வருகிறது. கூட்டுறவு பதிவாளர் இதுபற்றி எல்லாம் பரிசீலனை செய்வார்கள்.

Seepage Schemes.

* 27 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(*a*) the number of seepage schemes under investigation in the Lower Bhavani Project in Coimbatore district; and

(*b*) the number of schemes that have so far been sanctioned and executed?

1968 பிப்ரவரி 14]

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 46 (நாற்பத்தாறு) திட்டங்கள்.

(இ) 11 (பதினொரு) திட்டங்கள்.

திரு. ஏ. எம். ராஜா : தலைவரவர்களே, பாக்கி இருக்கிற திட்டங்களையும் நிறைவேற்றுவதற்கு அரசு நடவடிக்கைகள் மேற்கொள்ள முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : பாக்கியுள்ள திட்டங்கள் 46 இல் 19 திட்டங்கள் ஏற்றுக்கொள்ளத் தக்கவை அல்ல என்று இப்பொழுது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கின்றன. இருபத்தேழு கசிவு நீர்த் திட்டங்களில் நான் ஏற்கனவே குறிப்பிட்டபடி 11 திட்டங்கள் முடிவடைந்துவிட்டன. நிறைவேற்ற இருக்கிற திட்டங்கள் 7; நிறைவேற்ற ஆயத்தமாக உள்ள திட்டங்கள் 4. ஆய்விலே உள்ள திட்டங்கள் 5.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : இந்தக் கசிவு நீர்த் திட்டங்கள் ஏன் சீக்கிரமாக நிறைவேற்றப்படவில்லை என்று அதிகாரிகளைக் கேட்கும்பொழுது அவர்கள் சொல்கிறார்கள் நிதி வசதி இல்லையென்று. ஆகவே, குறைவாகச் செலவாகும் திட்டங்களை விவசாயிகள் முன்வந்து நிறைவேற்றிக்கொள்வதாக இருந்தால் அதற்கு அரசாங்கம் அனுமதியளிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : அதுபற்றி விவசாயிகள் திட்டவட்டமான ஒரு குறிப்பை அனுப்புவார்களானால் அதுபற்றி யோசிக்கலாம்.

DR. H. V. HANDE : Sir, has this Government examined the quantum of acreage that might come under this scheme and also the extra food production that might yield by executing this scheme?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இந்தத் திட்டங்களின் மூலமாகக் கூடுதலாக உணவு உற்பத்தி 902 டன் ஆகிறது.

*28 Q.—THIRU A. M. RAJA : Will the Hon. the Minister for Public Works be pleased to state :

(a) when the scheme for the utilisation of the seepage water of Palappalayam Pallam by constructing an anicut near Chandrapuram in Gobichettipalayam taluk, Coimbatore district was sanctioned; and

(b) the present state of the scheme?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : (அ) 1966, ஜூன் 1-ந் தேதியன்று இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது.

(இ) கலங்கல், குறுக்கு கட்டிட வேலைகள் ஆகியவற்றுக்கான ஒப்ப அறிவிப்பு (tender) நிச்சயிக்கப்பட்டபின்னர், இந்த வேலை நிறைவேற்றுவதற்கு எடுத்துக்கொள்ளப்பட்டது. 0-3-140 மைலில் முதல்சாலை மதகுக்கான கடைக்கால் போடும்